| | | |
|---|---|---|
| **அ.வ.எண்** | **:** | **971/2008** |
| **தேதி** | **:** | **03.08.2021.** |
| **பெயர்** | **:** | கனகசபை |

வா..த.சா.1.திரு. கனகசபை , என்பவருக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.த.சா.1 - குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.தசா.ஆ-6 மற்றும் 7 நாளிதழ் விளம்பரங்கள் இவ்வழக்கின் பிரதிவாதி தாவா இடத்தினை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால் கொடுத்தேன். வா.த.சா.ஆ.4 கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் வா.தசா.ஆ.6 மற்றும் 7 ஆகிய விளம்பர நாளிதழ்களை கொடுத்தேன். வா.த.சா.ஆ.4 ல் 8வது பாராவில் தாவா சொத்தை 6 மாத காலத்திற்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தொடர்ந்து கிரய பணம் பெற்றுவந்த காரணத்தினால் கிரயம் செய்ய முடியவில்லை. நான் கிரய பணத்தை 2005-2006 ம் வருடம் வரை 1ம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளேன். வா.த.சா.ஆ.5 ஆனது நான் 1ம் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததற்கான ரசீது ஆகும். அதில் நான் கடைசியாக பணம் கொடுத்து ரசீது பெற்ற தேதி 24.08.1993 ஆகும். 1993 ம் வருடத்திற்கு பின்பு எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இல்லையென்றால் பணம் கொடுத்தேன் ஆனால் அதற்கான ரசீது பெறவில்லை. நான் 1ம் பிரதிவாதிக்கு ரூ.5,29,600/- ஐ கிரய தொகையாக கொடுத்துள்ளேன். அது மட்டுமின்றி மேலும் சில தொகைகளை கொடுத்துள்ளேன். வா.தசா.ஆ.4 கிரய ஒப்பந்தத்தில் தாவா சொத்திற்கான மொத்த கிரய பணம் ரூ.15,26,400/- என்றால் சரிதான். அதில் நான் வா.த.சா.ஆ.5 ரசீது படி ரூ.15,29,600/- பணம் கொடுத்துள்ளேன். நான் 15.10.2019 ம் தேதிய என்னுடைய குறுக்கு விசாரணையில் தாவா சொத்தின் கிரய தொகை ரூ.5,29,600/- மட்டுமே கொடுத்ததாக கூறியுள்ளேன். நான் சுரேஷ் என்ற வழக்கறிஞர் மூலம் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு 17.08.2006 ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கிறஞர் அறிவிப்பிலும் கிரய தொகை ரூ.5,29,600/- கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன்

என்றால் சரியல்ல. 1993 ம் வருடம் வரை தான் 1ம் பிரதிவாதிக்கு கிரயத்திற்கான தொகை கொடுத்துள்ளேன் என்றும், அதன் பின்பு கிரய தொகை கொடுக்காததால் அன்றைய தினத்திலிருந்து 6 மாதத்திற்கு பின்பு வா.த.சா.ஆ.4 ஒப்பந்தப்படி தாவா சொத்துக்கள் திரும்ப உரிமையாளருக்கே சென்றுவிட்டது என்றால் சரியல்ல. தாவா தபசில் சொத்திற்கு ஏதேனும் அனுபவத்திற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.த.சா.ஆ.4 கிரய ஒப்பந்தம் , வா.தசா.ஆ.6, 7 விளம்பர நாளிதழ்கள் தாக்கல் செய்துள்ளேன். வேறு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. என்னுடைய முதன்மை சாட்சியத்தில் என்னுடைய வழக்குரையில் தெரிவிக்காத சில விஷயங்களை தெரிவித்துள்ளேன். அதனால் அவ்வாறு அதிகமாக தெரிவித்த விஷயங்கள் செல்லாது என்றால் சரியல்ல. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 14 வது பத்தியில் தாவா சொத்து சம்மந்தமாக சில ஆவணங்கள் நவநீதம் என்பவர் அலுவலகத்தில் இருப்பதாக கூறியுள்ளேன். அவர் இறந்துவிட்டதால் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் நவநீதம் என்பவர் இறந்துவிட்டார் என்றும், அவரது மகள் மூலமாக ஆவணங்களை எடுத்து தாக்கல் செய்வதாக கூறிவிட்டு தற்சமயம் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான் தாவா இவ்வழக்கினை 02.08.2006 ம் தேதியன்று திருவள்ளுவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். தாவா வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பு 31.07.2006 ம் தேதியன்று தாவா சொத்துக்கள் வேறு 3ம் நபர்களுக்கு கிரய ஆவணம் மூலம் விற்பனை செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை வாங்கிய நபர்கள் என் மீது அ.வ.எண்.753/2008 என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்தனர் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. அந்த வழக்கானது வழக்கறிஞர் ஆஜராகாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அந்த வழக்கினை திரும்ப கோப்பிற்கு எடுப்பதற்காக மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.753/2008 ல் தாவா சொத்தினை வாங்கிய நபர்கள் வாதியாக உள்ளனர் என்றால் சரிதான். அ.வ.எண்.753/2008 ல் உள்ள வாதிகள் தாவா சொத்து குறித்து தனித்தனியாக தாவா சொத்தின் உரிமையாளர் என்று விளம்புகை செய்ய வேண்டி பரிகாரம் கேட்டு அ.வ.எண்.34/2011 , 35/2011 தாக்கல் செய்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் ஏற்கனவே எனக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டு உள்ளது

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அ.வ.எண்.753/2008 ல் உள்ள வாதிகள் மீது காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.114/2008 வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கானது பல வருடங்களுக்கு முன்பே தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல நிலுவையில் உள்ளது. மேற்படி அ.வ.எண்.114/2008 வழக்கானது கடந்த 07.12.2012 ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தற்சமயம் நிலுவையில் தான் உள்ளது. தாவா இவ்வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான உரிமையில்லாத நிலையில் இவ்வழக்கினை தாக்கல் செய்ய எனக்கு அதிகாரம் இல்லையென்றால் சரியல்ல. தாவா சொத்தானது வேறு நபர்களுக்கு தற்சமயம் கிரயம் கொடுக்கப்பட்டிருப்பதால் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு உரிமையில்லாத நிலையில் பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்திருப்பது நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் தாவா சொத்திற்கான ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கான உரிமையை நிறுத்தி வைத்திருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் இது நாள் வரை எவர் மீதும் ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.தசா.ஆ.4 கிரய ஒப்பந்தத்தில் 12 வது பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனை படி 1993 வருட கடைசி ரசீதுக்கு பின்பு 6 மாதத்திற்குள் கிரயம் செய்யாத காரணத்தினால் எனக்கு முன்பணத்தினை பெற்றுக்கொள்ள மட்டும் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.4 ஆனது பதிவு செய்யப்படாத காரணத்தினால் கால வரையறை தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதால் தாவா வழக்கு தாக்கல் செய்ய கால வரையறை முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான அனுபவத்திற்கான ஆவணங்கள் வாதி பிரதிவாதிகள் பெயரில் இல்லாத காரணத்தினால் தாவா வழக்கினை தாக்கல் செய்ய எனக்கு அதிகாரம் இல்லையென்றால் சரியல்ல. ஆகவே இவ்வழக்கினை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.